# கம்பம் நகராட்சி

**2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05.01.2024-ஆம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கம்பம் நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

*********

**கூட்டப்பொருள்**

**1)** நகராட்சி ஆணையாளர் அவர்களின் 12/2023 -ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் - 417 பதிவு செய்யப்பட்டது**

**2)** நகராட்சி பொறியாளர் அவர்களின் 12/2023 -ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் - 418 பதிவு செய்யப்பட்டது**

3) கம்பம்நகராட்சியில் அனைத்து பல்வேறு திட்டப்பணிகள் சம்மந்தமான விளம்பரங்களை நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு செலவுத்தொகையினை வழங்குமாறு கீழ்காணும் நாளிதழிலிருந்து பட்டியல் வரப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் விபரப்படி விளம்பரக்கட்டணத் தொகையினை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | தேதி | நாளிதழ்பெயர் | விவரம் | பட்டியல் தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1 | 22.10.2023 | தினமணி | 2023–2024– கம்பம் நகராட்சியில் நடைபெற்றபணிகள் மற்றும் திட்டமதிப்பீடுகருத்துரு சமர்ப்பித்தது சம்மந்தமான விபரங்கள் விளம்பரப்படுத்தியமைக்கு | 16,800/– |
| 2 | 24.10.2023 | தினத்தந்தி | 2023–2024– கம்பம் நகராட்சியில் நடைபெற்ற பணிகள் மற்றும் திட்டமதிப்பீடு கருத்துரு சமர்ப்பித்தது சம்மந்தமான விபரங்கள் விளம்பரப்படுத்தியமைக்கு | 12,825/– |

அலுவலகக்குறிப்பு: 1) மன்றம்அனுமதிக்கலாம்
2) மேற்படிசெலவினத்தைபொதுநிதியிலிருந்து மேற்கொள்வதைமன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.136/2022/இ1

**தீர்மான எண் - 419 அனுமதிக்கப்பட்டது**

4) கம்பம்நகராட்சியில் அனைத்து பல்வேறு திட்டப்பணிகள் சம்மந்தமான விளம்பரங்களை நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு செலவுத்தொகையினை வழங்குமாறு கீழ்காணும் நாளிதழிலிருந்து பட்டியல் வரப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் விபரப்படி விளம்பரக்கட்டணத் தொகையினை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | தேதி | நாளிதழ்பெயர் | விவரம் | பட்டியல் தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1 | 28.05.2023 | தினகரன் | 2022–2023–ஆம் ஆண்டின் கம்பம்நகராட்சி ஓராண்டு சாதனைகள் விளம்பரப்படுத்தியமைக்கு | 17,850/- |
| 2 | 28.05.2023 | இந்துதமிழ் | திட்டப்பணிகளைதுவக்கவருகைதரும்மாண்புமிகு நகராட்சிநிர்வாகத்துறைஅமைச்சர்வருகைபுரிந்ததை விளம்பரப்படுத்தியமைக்கு (உதவி மக்கள் தொடர்பு அலுவலர் வழியாக வரப்பெற்றது) | 42,000/- |

அலுவலகக்குறிப்பு: 1) மன்றம்அனுமதிக்கலாம்
2) மேற்படிசெலவினத்தைபொதுநிதியிலிருந்து மேற்கொள்வதைமன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.136/2022/இ1

**தீர்மான எண் - 420 அனுமதிக்கப்பட்டது**

| | |
|---|---|
| 5) | 2023-2024-ஆம் ஆண்டிற்கு கம்பம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்,%.25.00 இலட்சம் மதிப்பீட்டில், கம்பம் நகராட்சி வார்டு எண்.11 கம்பம்முகைதீன் ஆண்டவர்புரம் நகராட்சி துவக்கப்பள்ளியில் இரண்டு வகுப்பறை கட்டிடம் தரைதளத்தில் கட்டுவதற்கு கம்பம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் பரிந்துரை கடிதம் நாள்.18.07.2023-ன்படி, தேனி, மாவட்டஆட்சித்தலைவர் அவர்களின்செயல்முறை ஆணை ந.க.எண்.2484/2023/தி6, 23.08.2023-ஆம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 20.09.2023-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு M/S A.P.Constructions நிறுவனத்தினருக்கு 29.09.2023-ஆம் தேதியன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது.மேலும் இப்பணி துவங்குவதற்கு முன்பே வடகிழக்குபருவமழை துவங்கியபடியாலும், ஏற்கனவே பொதுப்பணித்துறையினரால் மேற்காணும் பள்ளிக்கு 6 வகுப்பறைகள் கட்டுவதற்கு பணி வழங்கப்பட்டு அதற்கான பொருட்கள் குவிக்கப்பட்டு பணிநடைபெற்று வந்தநிலையில், அஸ்திவாரத்திற்கு தோண்டப்பட்ட மண்ணானது புதிதாக இரண்டு வகுப்பறைகள் கட்ட தேர்வு செய்யப்பட்டஇடத்தில், சேமித்து வைக்கப்பட்டிருந்ததாலும் இப்பணியினை உரியகாலத்திற்குள் துவங்க இயலவில்லை.<br><br>இந்நிலையில் கம்பம் நகராட்சிக்கு பள்ளிமேம்பாட்டு மானியம் (**SchoolImprovementGrant** )-மூலதனப்பணி (**Capital Work**) **- 2023 - 2024**–ன்கீழ், ரூ.86.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.11 கம்பம் முகைதீன்ஆண்டவர்புரம் நகராட்சி துவக்கப்பள்ளியில் இரண்டு வகுப்பறை கட்டிடம் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்படவுள்ள தரைதளத்தின்மேல்புறம் முதல்தளத்தில் கட்டுவதற்கும் ,கம்பம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது முதல்தளத்தில் இரண்டு வகுப்பறைகட்டிடம் கட்டுவதற்கும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.25741/2023/SS6, 26.10.2023-ஆம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 06.11.2023 அன்று தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 24.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிபெறப்பட்டு M/SA.P.Constructionsநிறுவனத்தினருக்கு 30.11.2023 அன்று பணிஉத்தரவு வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட இருந்தநிலையில் தேனி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.2484/2023/தி6, 15.12.2023-ஆம் நாளிட்ட செயல்முறை உத்தரவில், 2023-2024-ஆம் ஆண்டு கம்பம் சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் எடுத்து செய்யலாம் என்பதன் அடிப்படையில் ரூ.25.00இலட்சம் மதிப்பீட்டில், கம்பம் நகராட்சி வார்டு எண்.11 கம்பம் முகைதீன்ஆண்டவர் புரம் நகராட்சி துவக்கப்பள்ளியில் தரைதளத்தில் இரண்டு வகுப்பறைகள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை இரத்து செய்து, கம்பம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 30.11.2023-ஆம் தேதியிட்ட திருத்தியபரிந்துரை கடிதத்தின் அடிப்படையில் இப்பணியினை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பண்ணைப்புரம் பேரூராட்சி கரியணம்பட்டி சமுதாயக்கூடத்தில் உணவுக்கூடம் அமைக்கும் பணிக்கும் மற்றும் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியம், தே.செல்லாயிபுரத்தில் உள்ள சமுதாயக்கூடத்தில் உணவுக்கூடம் அமைக்கும்பணிக்கும் தேனி,மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.2484/2023/தி6, 15.12.2023-ஆம் தேதியன்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.மேற்கண்ட காரணிகளின் அடிப்படையில், பள்ளிமேம்பாட்டுமானியம் மூலதனபணிகள் (SFC 2023-24)–ஆம்ஆண்டிற்கு ரூ.86.00இலட்சத்தில், கம்பம் நகராட்சி முகைதீன் ஆண்டவர் நகராட்சி துவக்கப்பள்ளியின் முதல்தளத்திற்கு பதிலாக தரைதளத்தில் இரண்டு வகுப்பறைகள் கட்டுவதற்கும், மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு - மன்றம்அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1715/2023/இ1) |
| | **தீர்மான எண் - 421 அனுமதிக்கப்பட்டது** |

6) கம்பம் நகராட்சி கணினி பிரிவு மற்றும் இதர பிரிவுகளில் உள்ள 19 கணினிகளும், 8 ஒளி அச்சுப்பதிப்பான்களும் (Laser Printers) 4 புள்ளி அச்சுப்பதிப்பான்களும் (Dot Matrix Printers) 4 தடையில்லா மின்வழங்கிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தகாலம் முடிவடைந்துவிட்டது. மேலும் தடையில்லா மின்வழங்கிகள், ஒளிஅச்சுப்பேழைகள்(Toner Cartridge),மின்கலங்கள்(7Ah), கணினி உபகரணங்கள் (Computer pheriperals), உள்ள வலைத்தள இணைப்புகள் (Local Area Network, Broad bond, Optical fibre connection) புதிதாக வாங்க வேண்டியுள்ளது.. எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச விலைமதிப்பீடுரூ2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- 1) மன்றம்அனுமதிக்கலாம்
2) மேற்படிசெலவினத்தை2023-2024 ஆம் ஆண்டு பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1335/2023/இ1)**

**தீர்மான எண் - 422 அனுமதிக்கப்பட்டது**

7) கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கிருமி நாசினியாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பிளிச்சிங்பவுடர் மற்றும் சுண்ணாம்புதூள் விநியோகிம் செய்யும் பணிக்கு இவ்வலுவலக ஒப்ந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் 07.12.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | வரப்பெற்ற பொருட்களின் விவரம் | தொகை ரூ (GST 18% நீங்கலாக |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்பேட்ஸ் பொள்ளாட்சி | பிளிச்சிங்பவுடர் (1 கிலோ) | 40.00 |
| | | சுண்ணாம்புதூள் (1 கிலோ) | 9.00 |
| 2 | ஸ்ரீ பாலாஜீ மார்கெட்டிங் திண்டுக்கல் | பிளிச்சிங்பவுடர் (1 கிலோ) | 50.00 |
| | | சுண்ணாம்புதூள் (1 கிலோ) | 12.00 |

**அலுவலகக்குறிப்பு** :- குறைவான விலையை குறிப்பிட்டுள்ள ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்பேட்ஸ் பொள்ளாட்சி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்

**(ந.க.எண்.2597/2023/எச்1)**

**தீர்மான எண் - 423 அனுமதிக்கப்பட்டது**

8) கம்பம் நகராட்சி வார்டு எண்.32,காந்திநகர் செல்லும் பிரதான சாலையின் முன்புறம் சந்திப்பில் உள்ள சிறு பாலமானது மிகவும் சேதமடைந்து மழைநீர் செல்ல முடியாமல் இருப்பதை அகற்றி விட்டு புதிதாக மழைநீர் வடிகாலுடன் கூடிய சிறிய பாலம் கட்டுவதற்கு மதிப்பீட்டு ரூ 3,60,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- **1.** மன்றம் அனுமதிக்கலாம்.
**2.** மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதி 2023-2024ல் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் - 424 அனுமதிக்கப்பட்டது**

9) கம்பம் நகராட்சியில் நீண்ட காலமாக நிலவி வந்த பொது மக்களின் குடிநீர் பற்றாக்குறையை போக்க நகராட்சிக்கென தனி கூடுதல் குடிநீர் திட்டம் சுருளிப்பட்டி ரோடு முல்லையாற்றில் உறை கிணறு அமைத்த 23.09.2014 முதல் நகர மக்களுக்கு குடிநீர் குறைவின்றி பம்ப்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்ள 8 மின்விசை மோட்டார்களை உரிய தொழில்நுட்ப பணியாளர்களை கொண்டு இயக்குதல் பணிகளை செய்திட குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை முலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டதற்கு, இந்நகராட்சியின் முலம் கடந்த 18.11.2021 அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும் வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு எற்படாத வகையில், பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தாரர் திரு.எல்.இராஜேந்திரன் என்பவருக்கு, இந்நகர்மன்ற தீர்மான எண். 365, நாள்.11.09.2023 -ன் படி வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு ஒப்பந்தப்பணிக்காலம் 31.12. 2023 -ன்படி வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு ஒப்பந்த பணிக்காலம் 31.12.2023 -ல் முடிவடையும் நிலையில் மேலும் 3 -மாத காலத்திற்கு (01.01.2024 முதல் 31.03.2024 வரை) அனுமதி மற்றும் பணி நீட்டிப்பு செய்தும், இதற்க்கான உத்தேச மதிப்பீட்டு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் G.S.T உட்பட ரு. 232000/- (ருபாய் இரண்டு இலட்சத்து முப்பத்திரண்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியாளர் விபரம் | பணிபுரியும் நாட்கள் | 1 – நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | 3– மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3- நபர் | 273 | 568.00 | 155064.00 |
| 2 | காவலர் 1-நபர் | 91 | 426.00 | 38766.00 |
| | SUB TOTAL | | | **193830.00** |
| 3 | Provision for G.S.T. (18%) | | | 34889.00 |
| 4 | Provision for Tamilnadu Labour welfre fund (1%) | | | 2287.00 |
| 5 | Contigences and all other unforeseen of items work. | | | 994.00 |
| | **TOTAL** | | | **2,32,000.00** |
| | | | | |

அலுவலக குறிப்பு .:- மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2023- 2024 -ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரலாம்.

ந.க.எண். 579/2021/இ2

**தீர்மான எண் - 425 அனுமதிக்கப்பட்டது**

| | |
|---|---|
| 10) | கம்பம் நகராட்சியில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 27.12.2023 -ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், ஒவ்வொரு பணிகளுக்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வீதம் வரப்பெற்றுள்ளவை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத்தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | சதவீதம் குறைவு | சதவீதம் கூடுதல் |
| 1 | கம்பம் நகராட்சி, சுருளிப்பட்டிரோடு குடிநீர் நீரேற்று நிலையத்தில், 2000 LPM/60M திறனில் புதியதாக நீர் முழ்கி மின் மோட்டார் ஒன்று விநியோகம் செய்து பொருத்தும் பணி செய்தல் | 2,70,000/– | M.வேல்பாண்டியன் | – 0.01 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 5.00 |
| 2 | நகராட்சி வார்டு எண்.3, குரங்குமாயன் தெரு, வார்டு.22, பாரதியார் நகர் வடக்கு 11-வது தெரு, வார்டு. 7, சுப்பிரமணிய தெரு, வார்டு, 8 தாத்தப்பன் களம் 3-வது தெரு, வார்டு. 30, வ.உ.சி. திடல் அருகில், ஆகிய இடங்களில் குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் வால்வுகள் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளுதல் | 82,000 | M.வேல்பாண்டியன் | – 0.22 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 4.94 |
| 3 | கம்பம் நகராட்சி வார்டு எண். 11 முகைதீன் ஆண்டவர் புரம் முதல் தெருவில் உள்ள சிறுமின் விசைபம்பு பழுதடைந்த நிலையில் உள்ளதை அகற்றி, அவ்விடத்தில் புதியதாக சிறுமின் விசைபம்பு கட்டமைப்பு ஏற்படுத்தும் பணி செய்தல் | 1,60,000 | M.வேல்பாண்டியன் | – 0.64 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 4.31 |
| 4 | கம்பம் நகராட்சி வார்டு எண். 24, கிராம சாவடி தெரு, அண்ணாமலை நகர் குறுக்கு தெருவில், பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் செய்தல். | 3,00,000 | M.வேல்பாண்டியன் | –0.07 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 4.91 |

**அலுவலக குறிப்பு .:-** **வரப்பெற்ற 4- பணிகளுக்கான, இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட விலை விகிதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. M.வேல்பாண்டியன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.**

**ந.க.எண். 2581/2023/இ2**

**தீர்மான எண் - 426 அனுமதிக்கப்பட்டது**

11) கம்பம் நகராட்சி லோயர்கேம்ப் குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செய்ல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020 -ம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால், வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ. 44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள எல். இராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க.எண். 1136/2020/இ2, நாள். 01.12.2020 ம் தேதியிட்ட செயல்முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2020 முடிய லோயர்கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29156/2019/DO2/ நாள்.22.10.2020 ம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத நிலையில் தொடர்ந்து நீட்டித்துக் கொள்ளலாம்.

தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை முலம் கொண்டுவருவதற்கான உரிய கருத்தர சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களால் கோரப்பட்டதற்கு, இந்நகராட்சியின் மூலம் கடந்த 18.11.2021 அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும் வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையில் , பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தார்ர் திரு. எல். இராஜேந்திரன் என்பவருக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 366, நாள். 11.09.2023 -ன் படி வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு ஒப்பந்த பணிக்காலம் 31.12.2023 -ல் முடிவடையும் நிலையில்
தற்போதைய ஒப்பந்த்தாரர் திரு. எல். இராஜேந்திரன் என்பவருக்கு மேலும் 3 -மாத காலத்திற்கு (01.01.2024 முதல் 31.03.2024 வரை) அனுமதி மற்றும் பணிநீட்டிப்பு செய்தும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ESI. EPF. G.S.T. உட்பட தொகை ரூ. 11,00,000/- ( ரூபாய் பதினோறு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் பெயர் | பணிபுரியும் நாட்கள் | 1 – நபருக்கு நாள் ஒன்றுக்கன ஊதியம் | 3 – மாதத்திற்க்கான ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 273 | 636.00 | 173628.00 |
| 2 | படுகை வடிகட்டி இயக்குநர்.(Filter bed Operator) 3 நபர் | 273 | 713.70 | 194840.00 |
| 3 | காவலர் 12 நபர் | 1090 | 385 | 420420.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ESI @ 4.75% as per labour act 1948 (employees contribution @ 1.75 % of the wages to be recovered from the staff salery and in total 6.5%) | | | 37472.00 |
| 5 | EPF @ matchi, ng contribution of 12% of the employees wages be payable towards EPF A/c both by Employer /contracter and employee | | | 94667.00 |
| | | **Sub Total** | | 921027.00 |
| | Provision For GST 18% | | | 165785.00 |
| | Provision For Tamilnadu Labour welfar fund 1% | | | 10868.00 |
| | Contingences and all other unforseen of items work. | | | 2320,00 |
| | | **Total** | | **1100000.00** |

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு :-** | மேற்படிசெலவினத்தை குடிநீர் நிதி 2023-2024 -ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரலாம் |

**தீர்மான எண் - 427 அனுமதிக்கப்பட்டது**

இடம்: கம்பம்
நாள் : .02.01.2024

ஒப்பம்./-திருமதி நெ.வனிதா நெப்போலியன்,
நகர்மன்றத்தலைவர்,
கம்பம் நகராட்சி.